# உண்மையை அறிவார்களா? JAQH அமைப்பினர்

J. ஜாஃபர் சித்தீக், கம்பம், செல்: 9944283637

"பூமியில் உள்ளவர் அதிகமானோருக்கு நீர் கட்டுப்பட்டால் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழிகெடுத்துவிடுவார்கள். அவர்கள் ஊகத்தையே பின்பற்றுகின்றனர்; அவர்கள் அனுமானம் செய்வோர் தவிர வேறு இல்லை. (அல்குர்ஆன் 6:116)

பிறையைப் பார்த்தல் என்ற அடிப்படையில் JAQH தலைவர் சகோ.S.I. அப்துல் காதிர் மதனி ஈதுல் அழ்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்) தொழுகை மற்றும் முஹர்ரம் மாதத்தின் ஆஷூரா நோன்பு நாட்களையும் தங்களுடைய இணையதளத்தின் (Jaqh.org) மூலம் அறிவிப்பு செய்திருந்தார். அந்த அறிவிப்பு இதுதான்.

**ஹஜ் பெருநாள் அறிவிப்பு!**

***அறிவிப்பு: 1.*** ஹிஜ்ரி 1434 துல்ஹஜ் மாதத்தின் முதல் பிறை 5.10.13 சனிக்கிழமை அன்று மாலை பார்க்கப்பட்டது. எனவே துல்ஹஜ் மாதத்தின் முதல் நாள் 6.10.13 ஞாயிற்றுக்கிழமை ஆகும். இன்ஷா அல்லாஹ் 14.10.13 திங்கட்கிழமை அரஃபா நாளாகும். அன்றைய தினம் (ஹஜ்ஜுக்கு செல்லாமல் இருப்பவர்) முஸ்லிம்கள் எல்லோரும் அரஃபா நோன்பு வைக்க வேண்டும். மறுநாள் 15.10.13 செவ்வாய்கிழமை அன்று ஹஜ்ஜுப் பெருநாளாகும். இந்த நாளில் வல்ல அல்லாஹ் நாம் எல்லோருக்கும் அருள்புரிவானாக.

***அறிவிப்பு : 2.*** ஜம்யிய்யத்து அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ் (JAQH) ஆஷூரா தினம் அறிவிப்பு! அன்புடையீர் அஸ்ஸலாமு அலைக்கும்! 3.11.2013 ஞாயிறு துல்ஹஜ் மாதத்தின் 29வது நாளாகும். அன்று பிறை தென்படாததால் 4.11.2013 திங்கட்கிழமையை 30 ஆக பூர்த்தி செய்து 5.11.2013 செவ்வாய்க்கிழமை முஹர்ரம் மாதத்தின் முதல் நாளாக முடிவு செய்யப்பட்டுள்ளது. நவம்பர் 13,14 (துல்ஹஜ் 9,10) அஷூரா நோன்பு நாட்களாகும்.

**இரண்டு அறிவிப்புகளிலும் முரண்பாடுகள்:**

மார்க்க விஷயங்களில் குர்ஆன், சுன்னாவில் தீர்வை சொல்பவர்கள் பிறை சம்பந்தப்பட்ட ஹதீஃத்களை தவறாக அர்த்தம் செய்ததன் விளைவுதான் இவ்வாறு அறிவிப்புச் செய்ய தூண்டுகோலாக அமைகிறது.

1. பிறை பார்த்து நோன்பு வையுங்கள். பிறை பார்த்து நோன்பை விடுங்கள்.

2. மேகமூட்டமாக இருந்தால் 30 ஆக பூர்த்தி செய்யுங்கள்.

3. மஃரிபு வேலையில் மாதத்தின் இறுதி நாளில் பிறையைப் பார்ப்பது

4. பிறை பிறந்த தகவலை ஏற்றுக்கொள்வது.

மேற்கண்ட நான்கு செயல்கள்தான் மதனிகளும், உலவிகளும், டவுன் காஜிகளும் சொல்லும் ஆதாரங்களாகும்(?). மக்களிடம் கூலி வாங்கிக் கொண்டு பிரச்சாரம் செய்யும் மவ்லவிகளின் கூற்றில் கடுகளாவது உண்மை இருக்குமா? வாய்ப்பே இல்லை.

ஷிர்க், பித்அத், மூட நம்பிக்கைகளை எதிர்க்க, துடைத்தெடுக்க குர்ஆனை ஆதாரம் காட்டியவர்கள் பிறை விஷயத்தில் மவுனம் காப்பது ஏனோ?

**உலகத்தரம் வாய்ந்த பொய்:**

அறிவிப்பு 1ல் 5.10.13 சனிக்கிழமை துல்ஹஜ் மாதத்தின் முதல் பிறை மாலை பார்க்கப்பட்டது. இந்த அறிவிப்பு உண்மையா?

SI மதனி அவர்கள் உண்மையிலேயே அல்லாஹ்வுக்கு அஞ்சுபவராக இருந்தால் அன்றைய தினம் எங்கு யார் பிறை பார்த்தார்? அல்லது தகவலை எங்கிருந்து பெற்றார்? என்பதை அறியத் தருவாரா? தங்களுடைய இணையதளத்தில் அல்லது அல்ஜன்னத்தில் வெளியிடத் தயாரா?

ஆனால் நிரூபிக்கப்பட்ட விஞ்ஞானத்தின் மூலம் அன்றைய 5.10.13 நாள் New Moon day ஆகும். உலகில் எந்தப் பகுதியிலும் பிறை தெரிய வாய்ப்பில்லை. நபி(ஸல்) அவர்கள் கூறியது போல் "கும்மாவுடைய நாளை" (சந்திரனின் ஒளி பூமியில் விழாத நாளை) அந்த மாதத்தினுடைய 28வது நாள் (மாதம் 29 எனில்) அல்லது 29வது நாளுடன் (மாதம் 30 நாட்கள் எனில்) சேர்க்க வேண்டுமே அல்லாமல் மாதத்தின் கடைசி நாளில் பிறை தெரியவே தெரியாது.

காரணம் ஸூமூ லிருஃயத்திஹி வஅஃப்திரு லிருஃயத்திஹி என்ற வாசகத்தை சரியாக புரிந்து கொள்ளாத காரணம்தான்.

நீங்களாகவே மாதத்தின் முதல் நாளை (கிரிகோரியன் கிறித்தவ காலண்டரை JAQH காலண்டரை) தீர்மானித்து இறுதி நாளின் மஃரிபு நேரத்தில் பிறையை பார்க்க நபி(ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்களா?

உங்கள் செயலின் பிரகாரம் மூன்றாம் நாள் பிறையைப் பார்த்து, மூன்றாம் நாள் பிறை கண்டு இபாதத் செய்வது நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டலா?

பிறை கிழக்குத் திசையில்தான் பிறக்கும் மேற்கில் மறையும் என்ற அடிப்படை விஷயமும், தேய் பிறையை மாலை (மஃரிபு) நேரத்தில் பார்க்க முடியாது என்ற அடிப்படை விஷயமும் தெரியாததால் பிறையைப் பற்றிய ஞானமின்மை உங்களிடம் மிகைத்துக் காணப்படுகிறது.

பிறையின் படித்தரங்களை தினந்தோறும் அவதானித்து வருவீர்கள் என்றால் அதுவுமில்லை. இதை JAQH உறுப்பினர்கள் சற்றும் சிந்திப்பதில்லையே!

**யவ்முஷக் (மாயநாள், சந்தேகத்திற்குரிய நாள்) மார்க்க ஆதாரமா?**

"சந்திரனுக்குப் பல படித்தரங்களை உண்டாக்கினோம்; அது உலர்ந்து வளைந்த பழைய பேரீத்தம் மட்டையைப் போல் ஆகும் வரை" (அல்குர்ஆன் 36:39)

அனைவரது அறிவுரைகளைக் கேட்பவர்களுக்கே அல்லாஹ்வின் நன்மாராயமும் பாராட்டும் கிடைக்கிறது!

"பஜ்ருடைய நேரத்தில் தெரியக்கூடிய பிறையின் கடைசி நிலையான உர்ஜூனில் கதீமிற்கு முன்னர் உள்ள படித்தரங்களை என்றாவது பார்த்ததுண்டா? உர்ஜூனில் கதீமிற்கு மறுநாள் கும்மாவுடைய நாள் ஆகும். கும்மாவுடைய நாளுக்கு மறுதினம் ஃபஜ்ரிலிருந்து அடுத்த மாதத்தின் முதல் நாள் ஆரம்பமாகிறது. அன்றைய நாளின் மஃரிபு நேரத்தில் சில இடங்களில் மறையக்கூடிய முதல் பிறை கண்களுக்குப் புலப்படும். சங்கம நாள், அதற்கடுத்த மாதத்தின் 2ம் நாளில் மாலையில் பிறையைப் பார்த்து மாதம் பிறந்துவிட்டது என்று உளறுகிறீர்களே! இந்த நேரான, சத்திய, உறுதியான, நிலையான மார்க்கத்தில் அரபி படித்த மவ்லவிகளே குழம்பும் நிலை ஏன் ஏற்படுகிறது? அரபி தெரிந்தால் மட்டும் போதுமா? மார்க்கத்தை படிக்க வேண்டாமா? காரணம் நாங்கள்தான் மார்க்கத்தை சொல்ல தகுதி பெற்றவர்கள் அவாம்களாகிய மக்களால் விளங்க முடியாது என்ற இறுமாப்பே காரணம்.

| Country | Date | SUN | | MOON | | Illumination% |
|---|---|---|---|---|---|---|
| | | Rise | Set | Rise | Set | |
| Makkah | 5.10.13<br>6.10.13 | 6:13 | 18.06 | 6:26<br>7:21 | 18:18<br>19:05 | 0.2%-New Moon at 3:35<br>2.4% |
| Madina | 5.10.13<br>6.10.13 | 6:15 | 18.04 | 6:26<br>7:25 | 18:18<br>19:02 | 0.2%-New Moon<br>2.4% |

JAQH அமைப்பினர் ஆதாரமாகக் காட்டும் (தகவலைப் பெறுதல் என்ற அடிப்படையில்) மக்கா, மதீனாவிலும் 5.10.13 சனிக்கிழமை கும்மாவுடைய நாளாகும். மேலும் அன்றைய தினம் சந்திரனில் சூரிய ஒளி பிரதிபலிப்பு வெறும் 0.2% மட்டுமே! எனவே பிறை அறவே தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மாலையில் தெரியும் 2வது அல்லது 3ம் நாள் பிறையை முதல் பிறையாக எடுப்பதால் குழப்பங்கள்தான் மிஞ்சும். இப்போது சொல்லுங்கள் சகோதரர்களே. யூதர்களின் வழிமுறையை யார் பின்பற்றுகிறார்கள் என்று!

மக்காவில் சூரியன் உதித்த 13 நிமிடங்களுக்குப் பிறகு சந்திரன் உதயமாகிறது. சூரியன் மறைந்த 12 நிமிடங்களுக்குப் பிறகு சந்திரன் மறைகிறது.

மதீனாவில் சூரியன் உதித்த 11 நிமிடங்களுக்குப் பிறகே சந்திரன் உதயமாகிறது. சூரியன் மறைந்த 14 நிமிடங்களுக்கு பிறகே சந்திரன் மறைகிறது. 12 அல்லது 14 நிமிடங்களுக்கு பிறகே சந்திரன் மறையும்போது நிச்சயமாக அதன் பிரதிபலிப்பு நம் கண்களுக்குப் புலப்படாது. அதனால்தான் சந்திரனின் படித்தரம் புலப்படாத நாளை (கும்மாவுடைய நாளை) கழிந்த மாதத்துடன் சேர்க்க வேண்டும்.

கும்மாவுடைய நாளில் பிறை பார்த்ததாக உலகம் முழுவதும் இணையதளத்தில் தெரிவித்த மதனி அவர்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளட்டும்.

***6.10.13*** அன்று துல்ஹஜ் 1 என்ற JAQH அமைப்பிற்கு ***3.11.2013*** ஞாயிறு துல்ஹஜ் 29வது நாளாகும். அன்று பிறை தென்படாததால் 4.11.13 திங்களையும் சேர்த்து 30 ஆக பூர்த்தி செய்தனர்.

**அமாவாசையில் பிறை பார்த்த மதனீ:**

***5.10.13 சனி*** (JAQHற்கு துல்ஹஜ் 1) மற்றும் ***3.11.13 ஞாயிறு*** (JAQHற்கு துல்ஹஜ் 29) ஆகிய இரண்டு நாட்களும் Conjunction நாட்களாகும். அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன சம்பந்தம் என்று கிண்டலடித்த மதனி அவர்களே அமாவாசையில் பிறை பார்க்கும்படி உங்களைத் தூண்டியது எது?

5.10.13 அமாவாசையின் மாலையில் பிறை கண்ட மதனிக்கு 3.11.13 அமாவாசை நாளன்று பிறை தெரியவில்லையா? தக்லீது, ஷிர்க், பித்அத்தை விட்டு வெளியேறிய JAQH சகோதர்கள் மீண்டும் தவ்ஹீது என்ற போர்வையில் உச்சக்கட்ட தக்லீதிற்கு சென்றிருக்கிறீர்களே? சற்று சிந்திக்க வேண்டாமா'?

முதல் பிறை 5.10.13 என்றால், முதல் நாள் 6.10.13 எப்படி என விளக்குவீர்களா?

ஆக பிறைகளை தினம் தோறும் பார்ப்பது கிடையாது. ஹதீஃதிற்கு உண்மையான அர்த்தத்தை ஆய்வு செய்வதும் கிடையாது. பிறைகள் விஷயத்தில் குர்ஆனை அணுகுவதும் கிடையாது.

**மீண்டும் ஸஃபரில் குழப்பம் உண்டாகும் நிலை:**

5.11.13 செவ்வாய் முஹர்ரம் 1 என்று முடிவு செய்த உங்களுக்கு 3.12.13 செவ்வாய் முஹர்ரம் 29வது நாளாகும். அன்று நீங்கள் வழக்கம்போல் அன்றைய தினம் பிறையைத் தேடுவீர்கள். பிறை உங்களுக்குத் தென்படாது. எனவே 30 ஆக பூர்த்தி செய்வீர்கள்.

நீங்கள் பிறை தேடக்கூடிய அன்றைய நாள் 3.12.13 Conjunction Day ஆகும். பிறகு எப்படி பிறையைப் பார்ப்பீர்கள்? இப்படியே ஒவ்வொரு மாதமும் மேகமூட்டம் என்று சொல்லி 30 ஆக பூர்த்தி செய்து வருகிறீர்களே? மக்களை இவ்வாறு தான் ஏமாற்றுவதா? ஆக பொய் சொல்லி உங்கள் வாதத்தை நிலை நாட்டுவது போல் தெரிகிறது.

***"பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்"*** (அல்குர்ஆன் 3:61)

என்ற வசனம் உங்களுக்குத் தெரியாதா?

ஆகவே இந்த ஹிஜ்ரி ஆண்டு 1435ஐ ஆரம்பத்திலேயே சரி செய்வீர்களா?

**ததஜவினரும், சு.ஜ.வினரும் நிலை:**

ஒரு வருடத்தினுடைய எல்லா மாதங்களையும் 30 நாட்களாக பூர்த்தி செய்யும் மேகமூட்ட ஜமாஅத் தினரும், சுஜவினரும் நிலையும் தலைகீழாகவே உள்ளது.

அவர்களையே அறிவாளர்களாக அல்லாஹ் புகழ்கிறான் என்று 39:17,18 இறைவாக்குகள் கூறுகின்றன.

### அஷூரா நோன்பு

| | |
|---|---|
| JAQH | 13.11.13– புதன் – முஹர்ரம் 9<br>14.11.13–வியாழன் – முஹர்ரம் 10 |
| TNTJ & SJ | 14.11.13 – வியாழன்– முஹர்ரம் 9<br>15.11.13 – வெள்ளி – முஹர்ரம் 10 |
| சந்திர சுழற்சி அடிப்படையில் கணக்கீட்டை பின்பற்றுபவர்கள் | 12.11.13 – செவ்வாய் – முஹர்ரம் 9<br>13.11.13 – புதன் – முஹர்ரம் 10 |

12.11.13 செவ்வாய் 1 தேதி, 1 கிழமைக்கு ஒரு சாராருக்கு முஹர்ரம் 9 மற்ற சாராருக்கு முஹர்ரம் 8, முஹர்ரம் 7. 1 தேதி, 1 கிழமைக்கு மூன்று படித்தரங்களை பிறைக் காட்டுமா? ***"அல்லாஹ்வின் வசனங்களைக் கேலிக்கூத்தாக்கி விடாதீர்கள்..."*** (அல்குர்ஆன்: 2:231)

**அரபி பள்ளி பாமரர்களின் நிலை:**

**1. ஸஹாபாக்களின் கூற்றை மார்க்க ஆதாரமாக எடுக்க மாட்டோம் என கூறுபவரின் இரட்டை நிலை:**

2002-2013க்குள் அல்குர்ஆன் தமிழாக்கம் 12 பதிப்புகளை வெளியிட்ட TNTJ தலைவர் பீ.ஜை. அவர்கள் குர்ஆன், ஸுன்னாவைத் தவிர மூன்றாவது ஆதாரம் கிடையாது என்று தன்னுடைய அமைப்பிற்கு அஸ்தி வாரம் போட்டவர், பிறை விஷயத்தில் நபி தோழரின் கூற்றை ஆதாரமாக எடுக்கக் காரணம் என்ன? ஏன் இந்த இரட்டை நிலை?

அல்குர்ஆன் வசனம் 2:185ல் பிறை சம்பந்த மான 'ஷஹித' என்ற பதத்திற்கு குர்ஆனுக்கு குர்ஆனைக் கொண்டோ அல்லது நபி(ஸல்) அவர்களின் கூற்றை ஆதாரமாகக் கொள்ளாமல் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்க ளின் கூற்றை சான்றாகக் கொள்ள காரணம் என்னவோ?

(பார்க்க:பக்கம் 1119 விளக்கம் 44, பதிப்பு:12)

ஆதாரப்பூர்வமான நபிமொழிகளை தூக்கியெறியும் இந்த மேகக் கூட்டத்தார் பிறை சம்பந்தப்பட்ட குரைப் சம்பவம் மற்றும் வாகனக் கூட்டம் சம்பவத்தை ஆதார மில்லாத நிலையில் அதைப் பெரிய ஆதாரமாக்கி, பூதகர மாக்கி, சேதாரப்படுத்தியது தான் மிச்சம்.

**2. தபஉதாபீ ஸபஹாபியாக மாறிய அதிசயம்!**

அதனால்தான் என்னவோ, முஆவியா(ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் (ஹிஜ்ரி 60) வாழ்ந்த தபஉதாபீ குரைப் அவர்களை குரைப்(ரழி) என ஸஹாபியாக மாற்றி குரைப்(ரழி) சம்பவம் என இஸ்லாத்தில் இல்லாத புதிய வரலாற்றை பிறை விஷயத்தில் மோசடி செய்த பீ.ஜே.யின் மாணவர்களை என்னவென்று சொல்ல? (பார்க்க கட்டுரை: ஹிஜ்ரி கமிட்டியினருக்கு "மரண அடி" பக்கம் : 33)

Source :onlinepj.com

ஆக இவர்கள் குர்ஆன் மற்றும் நபி(ஸல்) அவர்களையும் பின்பற்றவில்லை. ஸஹாபாக்கள் கூற்றையும் ஆதாரமாகக் கொள்ள மாட்டோம் என்று மன இச்சை யைப் பின்பற்றிக் கொண்டு மேற்படி தலைவரின் பிறை ஒரு (சுய) விளக்கம் புத்தகத்தை மட்டும் படித்தால் கியாமத் நாள் வரை எந்த ஒரு தெளிவையும் சத்தியமாகப் பெற மாட்டார்கள். "ஏகத்துத்தை" கடைப்பிடிக்கும் "உணர் வு"ள்ள சகோதரர்கள் உண்மையை உணர்வார்களா?

ஆஷூரா நோன்பை 13.11.13, 14.11.13 கடைப்பிடித் தவர்களுக்கு 03.12.13 அன்று முஹர்ரத்தின் 29 வது நாளாகும். இவர்கள் வாதப்படி 29வது நாள் கண்டிப் பாக ஒரு மன்ஜில் இருக்க வேண்டும். ஆனால் நிரூபிக்கப்பட்ட அறிவியல் மூலம் அன்றைய தினம் கும்மாவுடைய நாள் (New Moon) ஆகும். எனவே பிறை தெரியவில்லை என்று பிதற்றுவார்கள். எனவே ஸஃபரை தவறான தேதி, கிழமையில் ஆரம்பிப்பார்கள். இதுவே தொடர்கதையாகி இந்த 1435 வருடம் அனைத்து மாதங்களையும் நிர்ணயம் செய்ய தவறான தகவல்களைத் தர நேரிடும்! அல்லாஹ்வுக்கு அஞ்சி, தலைவரை தக்லீது செய்யாமல் JAQHனர் சிந்தனை செய்வார்களா?

ஆஷூரா நோன்பை 14.11.13, 15.11.13 (வியாழன், வெள்ளி) கடைப்பிடித்தவர்களுக்கு (TNTJ, SJ) 4.12.13 புதன் முஹர்ரம் 29வது நாளாகம். இந்த மேகக் கூட்டத்தினர் செய்யும் ஹிமாலயத் தவறு ஸஃபருடைய முதல் நாளில் மறையும் பிறையைத் தேடி அன்று காண முடியாவிட்டால் 5.12.13 அன்று 30 ஆக பூர்த்தி எசய்து 6.12.13 ஸஃபர் 1 என்று இரண்டு நாட்களை விழுங்கி விடுவார்கள். இந்த மேகக் கூட்டத்தினர் பழைய மாதத்தின் இறுதி நாளான கும்மாவுடைய நாளைக் கடந்து அடுத்த புதிய மாதத்தின் முதல் நாளின் மஃரிப் நேரத்தில் மறையக் கூடிய முதல் பிறையைத் தேடி அவர்கள் கூற்றுப்படி (சந்தேகத்திற்குரிய நாளாக இருப்பதால்) கண்களுக்குப் புலப்படாததால் புதிய மாதத்தின் நாளை பழைய மாதத் தோடு சேர்த்து இறை நிராகரிப்புக்கு வழி வகுக்கின்றார் களோ அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

9:36,37, 55:5, 36:39, 2:189, 10:5, 16:12, 17:12, 6:96 அல்குர்ஆன் வசனங்களை பின்பற்றாததன் விளைவே இத்தகைய குழப்பமான சூழ்நிலைக்குத் தள்ளுகிறது.

***"அல்லாஹ்வின் வசனங்களை நம்பாதவர்களே பொய்யை இட்டுக்கட்டுவார்கள். அவர்களே பொய்யர் கள்.*** (அல்குர்ஆன் : 16:105)

3. ஆண்டுகள் எண்ணிக்கையை கணக்கிட முடியாதா?

நெல்லை ஏர்வாடியில் பேசிய காயல்பட்டினத்தைச் சேர்ந்த மௌலவி ஒருவர், ஆண்டுகள், மாதங்களின் எண்ணிக்கையை கணக்கிட முடியாது என்று 73:20ஐ ஆதாரமாகக் காட்டினார். அந்த வசனம் இதுதான்.

***... அல்லாஹ்வே இரவையும், பகலையும் அளவு***

மவ்லவி புரோகிதர்களின் சுயநல, வசீகர உடும்புப் பிடியிலிருந்து விடுபட படியுங்கள், பரப்புங்கள் அந்நஜாத்!

***டன் அமைத்துள்ளான். நீங்கள் அதைச் சரியாகக் கணக்கிட மாட்டீர்கள் என்பதையும் அறிவான்.*** (73:20)

ஆனால் 6:96, 17:12, 10:5 ஆகிய வசனங்களில் ஆண்டுகளின் எண்ணிக்கையை அறிய முடியும் என்கிறான் அல்லாஹ். ஒரு வசனத்திற்கு இன்னொரு வசனம் முரண்படுகிறது என்று மௌலவி அறிந்து வைத்திருக்கிறாரோ? என்னவோ? 73:20 வசனம் பூமி சுழற்சியால் ஏற்படும் இரவு, பகல் ஆகிய வற்றை அதாவது நேரத்தை சரியாக கணக்கிட முடியாது என்று கூறுகிறான். ஆனால் 6:96, 17:14, 10:5ல் சந்திர ஓட்டத்தை மையமாக வைத்து பல ஆண்டுகள் எண்ணிக்கையை அறிய முடியும் என்கிறான்.

மௌலவிகளே குர்ஆனில் முரண்பாடு உள்ளது என்று சொல்ல வருகிறீர்களா?

***"இந்த குர்ஆன் நேரானதற்கு வழிகாட்டுகிறது"***

(அல்குர்ஆன் : 17: 9)

**4. கணக்கீட்டில் தவறு ஏற்படும். ஆகவே கணக்கைப் பின்பற்றக் கூடாது:**

இந்தக் கூற்று பிரபல பிர்தௌசி மௌலவி பேசிய கூற்று. இவர் கூறிய உதாரணம் நகைப்பிற்குரியதாகவே இருக்கிறது. தற்போதைய செல்போன் கண்டுபிடிப்புகளில் சக்சஸ், ஃபெயிலியர் மாடல் வருவது போல் பிறையை கணக்கிடுவதிலும் தவறுகள் வருமாம். என்னே அறிவீனம் பாருங்கள்? இந்த மெத்தப் படித்த மேதாவிகள் என்ன சொல்ல வருகின்றார்கள் தெரிகிறதா? சூரிய, சந்திர ஓட்டத்தில் குளறுபடிகள் இருப்பதால் கணக்கை நிராகரிக்க வேண்டுமாம்.

அல்குர்ஆன் 55:5ல் சூரியனும், சந்திரனும் கணக்கின்படியே உள்ளன என்று அல்லாஹ் கூறுகிறான். உண்மையான மௌலானா (பாதுகாவலன்) படைத்தவனின் கூற்றை நம்புவதா? அல்லது கால்காசு பெறாத ஸனது மௌலவிகளின் கூற்றை நம்புவதா? இந்த மௌலவி குழம்புவதற்குக் காரணம் என்ன? நடை முறையில் 5 விதமான கணக்கீடுகள் சந்திர மாதத் தின்கால அளவைக் கண்டறிய பயன்படுகின்றன.

1. Draconic (node to node): 27 days 05 hrs 05 min. 39.5Sec.
2. Tropical (equinox to equinox) : 27 days 07 hrs. 43m 4.7S
3. Sideral (fixed star to fixed star): 27 days 07hrs. 43m 11.6S
4. Anomalistic (Perigee to Perigee): 27days 13hrs.18m 33.1S
5. Synodical (new moon to new moon) : 29 days 12 hrs 44m 2.9S

நபி(ஸல்) அவர்கள் மாதம் என்பது 29 அல்லது 30 ஆகவும் இருக்கும் எனக் கூறியுள்ளார்கள். மேற்கண்ட கணக்கீடு முறைகளில் எந்த முறை நபி(ஸல்) அவர்களின் கூற்றுக்கு ஒத்து வருகிறது. அதை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? ஒரு மனிதனுக்கு கணக்கீடு புரியவில்லையென்றால் ஒட்டு மொத்த சமுதாயத்திற்கும் விளங்காமல் போய்விடுமா? சூரியனை அடிப்படையாகக் கொண்ட தொழுகைக்குப் பயன்படும் அட்டவணையின் கணக்கீடுகளை புரிந்து கொண்டுதான் இபாதத் செய்கிறார்களா? என்பதை விளக்க வேண்டும்.

**4. ததஜ இமாமின் நவீன விளக்கம்:**

அல்குர்ஆன் 9:36 என்ற வசனத்திற்கு பக்கம் 1284ல் (12வது பதிப்பு) விளக்கக் குறிப்பில் (202) எழுதிய விளக்கத்தை அவதானியுங்கள்.

... வருடம் என்பது அதாவது சூரியனைப் பூமி சுற்றும் கால அளவு என்பது 12 மாதங்கள்தான். இது சூரியனையும் பூமியையும் படைக்கும் பொழுதே என்னால் ஏற்படுத்தப்பட்ட முடிவு என்று இறைவன் கூறுவதைத் திருகுர்ஆன் எடுத்துச் சொல்கிறது.

(பக்:1285)

பீ.ஜை. அவர்கள் நன்றாக அறிந்துதான் எழுதியுள்ளாரா? அல்லது அறியாமல் எழுதியுள்ளாரா? ஓர் ஆண்டு என்பது சூரியனை, பூமி சுற்றும் கால அளவா? அல்லது சந்திரன், பூமியை 12 முறை சுற்றும் கால அளவா? சூரியனை பூமி சுற்றும் கால அளவு 365.2421 நாட்கள். 365.2421/12 எனில் மாதம் ஒன்றுக்கு 30.4368 நாட்கள். ஆனால் நபி (ஸல்) அவர்கள் மாதம் என்பது 29 அல்லது 30 நாட்களாகவும் இருக்கிறது என்று கூறியுள்ளார்களே?

சூரியனை மையமாக வைத்து நாட்காட்டியை அமைத்ததால்தான் 10 மாதங்கள் ஒரு வருடமாகவும், 15 மாதங்கள் 1 வருடமாகவும் முன்பு பின்பற்றப்பட்டு வந்தது. இந்த நிலையான, நேரான மார்க்கத்தில் மாதங்கள் 12ம் சந்திரனை அடிப்படையாகக் கொண்டே கணக்கிடப்பட வேண்டும். அதில் நான்கு மாதங்கள் புனிதமானவை என்றும் அல்லாஹ் கூறுகின்றான்.

நபி(ஸல்) அவர்களும் துல்கதா, துல்ஹஜ், முஹர்ரம் மற்றும் ரஜப் ஆகிய நான்கும் புனிதமானவை என்றும் கூறியுள்ளார்கள். ஆகவே வானங்களையும், பூமியையும் படைக்கும்போதே 12 மாதங்கள் என்று குறிப்பிட்டது சந்திரனை அடிப்படையாகக் கொண்டதுதான்.

ஆகவே அன்பிற்கினிய முஸ்லிம் சகோதர, சகோதரிகளே மதனிகளும், பிர்தௌஸிகளும், உலவிகளும் பொய்யைத்தான் நிலைநாட்ட முற்படு

2:256,257,4:51,60,76, 5:60, 16:36, 39:17 வசனங்கள் தாஃகூத் எனக் குறிப்பிடுவது மதகுருமார்களையே!

கின்றனர். ததஜவைப் பொறுத்தவரை தனது கருத்து தவறு என்று தெரிய வரும்போது மற்றவர்கள் சுட்டிக் காட்டும்போது அதை பகிரங்கமாக அறிவிப்பதைக் கொள்கையாகக் கொண்ட ஜமாஅத் என்று கூறும் நீங்கள் (பார்க்க தீன்குலப் பெண்மணி நவம்பர் 2013 பக்.4) பிறை விஷயத்தில் 100% தவறான நிலைப்பாட்டில் இருக்கிறீர்கள்.

குர்ஆன், ஹதீஃதை பின்பற்றக்கூடிய சகோதர சகோதரிகள் மத்தியில் இந்த பிறை விஷயத்தில் தலைவர் சொல்லை விட்டுவிட்டு உளப்பூர்வமாக, நடு நிலையாக, ஆய்வை மேற்கொண்டு தீர்வுகண்டு வருடத்திற்கு இரு முறையாவது சந்தோஷமாக பெரு நாட்கள், நோன்பை கடைப்பிடிக்க அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப் பிடிக்க முன் வருவீர்களா?

அல்லாஹ் நம் அனைவருக்கும் நேர்வழி காட்டப் போதுமானவன்.

**யூதர்களைப் பின்பற்றுவது யார்?**

ஒவ்வொரு யூத காலண்டரிலும் அமாவாசையில் இருந்துதான் சந்திர மாதம் ஆரம்பமாகிறது. அதே போல் ஒவ்வொரு நாளும் சூரிய அஸ்தமான நேரத்திலிருந்து மறு நாள் சூரிய அஸ்தமான நேரம் வரை நாளாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. (Evening to Evening) அதாவது நாளை மாலை 6 மணியிலிருந்து ஆரம்பிக்கிறார்கள்.

***And there was evening and there was morning.***
(Gen 1.5) 1.8, 1.13, 1.19, 1.23, 1.31, Gen 2.2.

யூதக் காலண்டரில் Nisan-30, Iyar-29, Sivan-30, Tammuz-30, Av-30, Elul-30, Tishrei-30, Marchesvan-29 or 30, Kislev-29 or 30, Tevet-29, Shevet-30, Adar-29 என்று மாதங்களை நிர்ணயம் செய்துள்ளார்கள்.

இதில் இரண்டு மாதங்களில் 29 or 30 என்று யூகத்தின் அடிப்படையில் நிர்ணயம் செய்துள்ளார்கள். ஆனால் இஸ்லாம் கூறும் சந்திர நாட்காட்டியில் எந்தவித சந்தேகத்திற்குரிய நாள் என்று எதுவும் கிடையாது. யூதர்கள்தான் நாட்களை மாலை வேளையில் ஆரம்பம் செய்கிறார்கள். ஆனால் இஸ்லாமிய மார்க்கத்தில் ஃபஜ்ரிலிருந்து நாள் ஆரம்பமாகிறது. எனவே யூதர்களை பின்பற்றுவோர் யார்? என்பதை முஸ்லிம்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்:

*"தாம் செய்தவற்றில் அறிந்து கொண்டே பிடிவாதமாக இருக்க மாட்டார்கள்.* (அல்குர்ஆன்: 3:135)

***"இந்தத் தூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்டதன் மீது நம்பிக்கை கொண்டுள்ளார். அவரை ஏற்றுக் கொண்டவர்களும் அந்த வழிகாட்டுதலின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர்.*** (அல்குர்ஆன்: 2:285)

***"இறை நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப் போராயும் நீதிக் குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள்."***
அல்குர்ஆன்: 5:8)

## நூல் அறிமுகம்!

### அண்ணல் நபி(ஸல்) அழகிய வரலாறு

ஆசிரியர் : **தாழை எஸ்.எம்.அலீ** விலை : ரூ. **60/-**

வெளியீடு :

*சாஜிதா புக் சென்டர்*
***248, தம்புச் செட்டித் தெரு, சென்னை 1.*** போன்: 044-2522 4821
Email:shajithabookcentre@yahoo.com

நபி(ஸல்) அவர்களின் வரலாறு மிக அழகிய முறையில் எளிமையாக எழுதப்பட்டுள்ளது. பக்கம் 21-ல் காணப்படும் சகக்கிழத்திகளிடையே பிணக்குகள் என்று எழுதப்பட்டுள்ளது தவறு. அது யூதர்களின் சதி. இப்றாஹீம்(அலை) அல்லாஹ்வின் ஆணைக்கு அடிபணிந்து மகன் இஸ்ஹாக்கையே பலியிட முற்பட்டார் என்பது யூதர்களின் வாதம். அதற்குத் தோதாக இஸ்மாயீல்(அலை) பிறந்தவுடன் இஸ்ஹாக்கும் பிறந்துவிட்டார் என்பது அவர்களின் கூற்று. ஆனால் அல்குர்ஆன் 37:112 இறைவாக்கு, இஸ்மாயீல்(அலை) அவர்களைப் பலியிட முற்பட்ட பின்னரே, இஸ்ஹாக்(அலை) பிறந்ததாகக் கூறுகிறது. 37:100லிருந்து 113 வரை படித்து உணர்கிறவர்கள் இந்த உண்மையை விளங்க முடியும். மேலும் சில சிறிய தவறுகளும் காணப்படுகின்றன. ஆயினும் படித்து நபி(ஸல்) வரலாற்றை அறிந்து கொள்ள ஒரு நல்ல நூலாகும். வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டுகிறோம்.

அந்நஜாத்தின் வளர்ச்சி புரோகிதத்தின் வீழ்ச்சி! புரோகிதத்தின் வீழ்ச்சி கலப்படமற்ற தூய இஸ்லாத்தின் எழுச்சி!

அல்குர்ஆன் மொழியாக்கம் : தமிழ் 4CD, மலையாளம் 3CD, உருது 3CD, ஆங்கிலம் 3CD

## அந்நஜாத் இதழ் ஆசிரியரின் உரைகள்!

*1. இன்று முஸ்லிம்களைக் குழப்பி வரும் குஃப்ர் ஃபத்வா, தர்கா சடங்குகள் செய்யும் பள்ளி இமாம்கள் பின்னால் நின்று தொழலாமா? தொப்பி இஸ்லாமிய மார்க்கத்தன் அடையாளமா? தொழுகையில் அவசியம் தொப்பி அணிய வேண்டுமா? மத்ஹபு பள்ளிகளில் சில நிபந்தனைகள் போட்டு போர்டு வைத்திருக்கிறார்களே! இது மார்க்கத் திற்கு உட்பட்டதா? பள்ளியில் இரண்டாவது ஜமாஅத் நடத்த மார்க்கம் அனுமதிக்கிறதா? ஜனசா தொழுகையை தொழ வைக்க முன்னுரிமை யாருக்கு? பள்ளி இமாம்கள் பள்ளி நிர்கவாகிகளுக்கு கட்டுப்பட்டவர்களா? அல்லது பள்ளி நிர்வாகிகள் பள்ளி இமாம்களுக்குக் கட்டுப்பட்ட வர்களா? முஸ்லிம் சமுதாயம் ஒன்றுபடுவதற்கு வழியே இல்லையா? இருந்தால் அதற்குரிய வழி என்ன? யார் அமீர்? அந்த அமீர் இப்போது இருக்கிறாரா? இல்லை என்றால் முஸ்லிம்கள் எப்படி யார் தலைமையில் ஒன்றுபடுவது போன்ற பல கேள்விகளுக்கு பதில்கள் அளித்து பதிவாகி அவை 2010 அக்டோபர் 4,11,18,3 திங்கள் கிழமைகளில் இரவு 10.00–10.30க்கு மக்கள் மன்றத்தால் தமிழன் தொலைக்காட்சியில் ஒளி, ஒலி பரப்பானது. அது இப்போது 2 DVDயாகக் கிடைக்கிறது.*

*2. ரமழான் மாதம் காயல்பட்டினம் IIM-ல், அல்லாஹ் வுக்கும், அல்லாஹ்வின் அடிமைகளான மனிதர் களுக்கும் இடையில், அல்லாஹ்வின் அனுமதி பெற்ற இறுதித்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களுக்குப் பிறகு வேறு எந்த மனிதரும் இடைத்தரகராக, வழிகாட்டியாக, மதகுருவாக, மதபோதகராக வரவே முடியாது. மத போதகர்களை வழிகாட்டிகளாகக் கொள்வது 7:3, 18:102–106, 33:36,66–68 இறைக் கட்டளைகள்படி நரகில் சேர்க்கும் வழிகேடாகும் என்பதற்குரிய மேலும் பல இறைவாக்குகளைக் கொண்டு ஆற்றிய உரையும் DVDஆகக் கிடைக் கிறது. மேலும்*

| எண் | தலைப்பு | அளவு |
|---|---|---|
| 3. | அபூ அப்தில்லாஹ் Vs பீ.ஜை பிரிவுகள் விவாதம் (1997) | 13 CD |
| 4. | அபூ அப்தில்லாஹ் குழுவினர் Vs பீ.ஜை. குழுவினர் பிறை விவாதம் (2000) | 7 CD |
| 5. | ஜகாத் (இந்தியா) | 1 CD |
| 6. | வெற்றியின் பக்கம் ஓர் அழைப்பு! | 1 CD |
| 7. | படைத்தவனை மறந்த சமுதாயம்! | 1 CD |
| 8. | சீர்திருத்தத்திருமணம்! | 1 CD |
| 9. | அல்குர்ஆன் புரோகிதர்களுக்காக அல்ல மனிதர்களுக்காகவே இறங்கியது! | 2 CD |
| 10. | இஸ்லாத்தில் நுழைந்துவிட்ட புரோகிதம்! | 2 CD |
| 11. | மவ்லவிகளைப் பின்பற்றுவது வழிகேடே! | 2 CD |
| 12. | மவ்லவிகள் இஸ்லாமிய மார்க்கத்தில் அதிகாரம் பெற்றவர்களா? | 2 CD |
| 13. | இஸ்லாத்திற்கு முரண்பட்ட இயக்கங்கள்! | 3 CD |
| 14. | மத்ஹபு பிரிவுகள் கூடாதென்றால் இயக்கப் பிரிவுகள் கூடுமா? | 3 CD |
| 15. | கேள்வி பதில்கள்! | 10 DVD |
| 16. | சர்வதேச தலைப்பிறை காயல்பட்டினம், விஜய் TV, திருப்பூர் | 3CD |
| 17. | ஜகாத் நூர்முஹம்மது (பாக்கவி) Vs பீ.ஜே. விவாதம் பற்றிய விளக்கம்,துபை | 3 CD |
| 18. | சர்வதேச தலைப்பிறை துபை நிகழ்ச்சி! | 2 CD |
| 19. | துபையில் பல நிகழ்ச்சிகள், கேள்வி, பதில்! | 9 CD |
| 20. | வெற்றியாளர்கள் யார்? பெங்களுர்! | 2 CD |
| 21. | முஜிபுர்ரஹ்மான் Vs பீ.ஜை., குர்ஆன் மொழியாக்கத்தில் தவறுகள் | 2 DVD |
| 22. | 24, 25.08.1430–ல் பெரம்பலூர் ஒற்றுமை முயற்சி கருத்தரங்கம்! | 10 DVD |
| 23. | 29.5.2009 கோட்டாற்றில் நடந்த இயக்கங்களால் சமுதாயத்திற்கு பலமா? பலவீனமா? சர்வதேச தலைப்பிறை, மார்க்கப் பணிக்குக் கூலி (சம்பளம்) அனுமதிக்கப்பட்டதா? அல்குர்ஆன் உலக மக்கள் அனைவருக்கும் விளங்குமா? அல்லது மவ்லவிகளுக்கு மட்டும் விளங்குமா? ஆகிய நான்கு தலைப்புகளில் பலரால் ஆற்றப்பட்ட உரைகள்! | 2DVD |
| 24. | 16.09.2009–ல் இஸ்லாத்தில் பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்படுகிறதா? அல்லது உரிமைகள் மறுக்கப்படுகிறதா? | 2 DVD |
| 25. | மனித உறுப்புகள் தானம் கலந்துரையாடல், தமிழன் TV நிகழ்ச்சி! | 1 DVD |
| | ஜும்ஆ உரை மற்றும் சில தலைப்புகள்! | 1 Audio CD |
| 26. | ஏப்ரல் 2010–ல் சிங்கப்பூர் சகோதரர் பஷீருடன் அபூ அப்தில்லாஹ் கலந்துரையாடல்! | 1DVD |
| 27. | 1.8.2010 கோட்டைக்குப்பம் ஒரு நாள் கருத்தரங்கம்! | 6 DVD |
| 28. 29. | 22,23 ஷஃபான் 1432 துறைமங்களம் J.K.மஹாலில் இடம் பெற்ற பிறை பற்றிய ஆய்வரங்கம், கருத்தரங்கம் | 8DVD |
| 30. | ஆத்திகமா? நாத்திகமா? பெங்களுர் | 3 DVD |
| 31. | அழிவுப் பாதையில் மனிதன்! | 1 DVD |
| 32. | சர்ச்சைக்குரிய ஜமாஅத் அல் முஸ்லிமீன்! | 1 DVD |
| 33. | மூடப் பழக்கங்களை மூட்டைக் கட்டுவோம்! வட்டியின் கொடுமை! | 1 DVD |
| 34. | ஈசா(அலை) உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? | 1 DVD |
| 35. | 1.7.12 பெரம்பலூர் நிகழ்ச்சிகள்! | 3 DVD |
| 36. | தர்கா சடங்குகள் மட்டும்தான் இணைவைப்பா? | 1 DVD |
| 37. | 01.01.1434(14.11.2012) ஆய்வரங்கம்! கருத்தரங்கம்!! | 1DVD |

**CD விலை ரூ.15/– DVD விலை ரூ.25/–**

**முஸ்லிம் பதிப்பகம்,** 51, திப்பிரான் தொட்டித் தெரு, திருச்சி–8.

தொடர்பு எண்: 8825184161, 9345100888

Editor, Printer & Publisher, K.M.H. ABOO ABDILLAH, 51,Thippiranthotti Street, Trichy-620 008. ✆ 2711888, 2702417. Cell : 93451-00888
Press : ASIAN COMPUTER OFFSET PRINTER, 33, Kiledhar Street, Trichy-620 002. Fax : 2705803. Phone (0431)2700888, 2711388